Thalaivaasal
# தலைவாசல்
Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்
வீடு 01 வாசல் 85 | thalaivaasaltv@gmail.com | திங்கட்கிழமை | டிசம்பர் 28, 2020






# எமது உறவுகளை சிறைமீட்க அணிதிரள்வோம்

## நல்லூரில் ஆர்ப்பாட்டம்

இலங்கை சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி யாழ்.நல்லூர் கந்தசுவாமி ஆலய சுற்றாடலில் இன்று காலை பாரிய கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலைக்கான குரலற்றவர்களின் குரல் அமைப்பு ஏற்பாடு செய்த இந்த போராட்டம் நல்லூர் பின் பகுதியில் இன்று காலை இடம்பெற்றது. 03

## தம்மிக்கவின் கொரோனா பாணி அருந்திவருக்கு தொற்று

வறக்காப்பொல பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 12 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும், அவர்களில் ஒருவர் கேகாலை ஆயுர் வேதனப் பாணியை அருந்தியவர் எனவும் சுகாதார பரிசோதகர் தெரிவித்தார் என "திவயின" நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

தொற்றாளர்கள் கொரோனா சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் சுய தனிமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.



### சர்வதேச சுயாதீன விசாரணையே

## எமக்கு நீதியைப் பெற்றுத்தரும்

### சாணக்கியன் எம்.பி கடிதம்

சர்வதேச சுயாதீன விசாரணை மேற்கொள்ளப்படும் போதே எமக்கு நீதிகிடைப்பது சாத்தியமாகும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

வட கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்திற்கு அனுப்பி வைத்துள்ள கடித்திலேயே அவர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அனுப்பி வைத்துள்ள கடித்தில், "வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டத்தை முன்னின்று நடாத்திய காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தாய்மாரில் 71 இற்கும் அதிகமானவர்கள் இறந்து போய் உள்ளதனை ஆவணப்படுத்தி 03

## 185 சுற்றுலாப் பயணிகள் இலங்கை வருகை

உக்ரைனிலிருந்து 185 சுற்றுலா பயணிகளுடன் கூடிய விஷேட விமானம் ஒன்று மத்தள விமான நிலையத்திற்கு வந்தடைந்துள்ளதாக சுற்றுலா துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

ஸ்கைஅப் விமான சேவைக்கு சொந்தமான விஷேட விமானம் ஒன்றில் குறித்த பயணிகள் இலங்கையை வந்தடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சுற்றுலா பயணிகள் 10 முதல் 14 நாட்கள் இலங்கையில் தங்கியிருக்க போவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதனடிப்படையில் கொவிட் 19 பெருந்தொற்று காரணமாக நிறுத்தப்பட்டிருந்த இந்த நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகளை அழைத்து வருவதற்கான வேலைத்திட்டம் இன்று முதல் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

## கொரோனா தொற்று வட மத்திய மாகாண முதல்வரின் அலுவலகம் மூடப்பட்டது

கொரோனா தொற்று உறுதியான ஒருவர் அடையாளம் காணப்பட்டதை அடுத்து வட மத்திய மாகாண முதல்வரின் அலுவலகம் இன்று (திங்கட்கிழமை) முதல் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

இந்நிலையில் தொற்று உறுதியானவருடன் தொடர்புடைய அனைவருக்கும் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படும் என முதலமைச்சர் அலுவலகம் அறிவித்துள்ளது.

மேலும் முதல்வரின் அலுவலக வளாகத்தில் கிருமி நீக்கம் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு அடுத்த இரண்டு அல்லது மூன்று நாட்களில் மீண்டும் அன்றாட நடவடிக்கைகள் தொடங்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## சாரதி அனுமதிப் பத்திரம் அச்சிடும் நடவடிக்கைகள் இராணுவத்தினரிடம் ஒப்படைப்பு!

சாரதி அனுமதிப்பத்திரம் அச்சிடும் நடவடிக்கைகள் எதிர்வரும் 1ம் திகதி முதல் இலங்கை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படுமென போக்குவரத்து ஆணையாளர் சுமித் அலஹகோன் தெரிவித்துள்ளார்.

11 ஆண்டுகளாக தென்னாபிரிக்க நிறுவனமொன்றினால் இச்சாரதி அனுமதிப் பத்திரங்கள் அச்சிடப்பட்டு 03

## நாட்டில் மேலும் 366 பேருக்கு கொரோனா!

நாட்டில் மேலும் 366 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் இதுவரை தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 41 ஆயிரத்து 420 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் இலங்கையில் மேலும்



520 பேர் குணமடைந்துள்ள நிலையில் குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 33 ஆயிரத்து 221 ஆக காணப்படுகின்றது.

தற்போது தொற்று உறுதி செய்யப்பட்டவர்களில் 8 ஆயிரத்து 8 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவரும் அதேவேளை 614 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் மருத்துவ கண்காணிப்பில் உள்ளனர்.

மேலும் இலங்கையில் கொரோனா தொற்றினால் இதுவரை 191 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




**தரணி எங்கும் தமிழராய் இணைவோம்**

தலைவாசல்
எங்கள் பாரம்பரியம்
Thalaivaasal
திங்கட்கிழமை, டிசம்பர் 28, 2020

# தமிழர்களுக்கு சமஷ்டி தீர்வு என மீண்டும் மக்களை ஏமாற்ற முயற்சி

மாகாண சபைக்கான தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக சமஷ்டிதான் தீர்வென கூறி மீண்டும் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஏமாற்ற முயற்சிக்கின்றதென தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி கட்சி செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி இன்று (திங்கட்கிழமை) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடக அறிக்கையில் அவர் மேலும் கூறியுள்ளதாவது, “தற்போது சமஷ்டி என்ற பதம் சிங்களத் தலைமைகளுக்கும் சிங்கள மக்களுக்கும் பிடிக்காத ஒரு சொல்லாகி விட்டது.

ஆரம்பத்தில் சமஷ்டி என்ற வார்த்தையை சிங்களத் தலைமைகள்தான் பேச ஆரம்பித்தனர். அது ஒரு காலம். பின் அவர்களே தனிச்சிங்கள சட்டம் கொண்டு வந்தார்கள். முள்ளிவாய்க்காலில் யுத்தம் முடிவுக்கு வரும் வரை சமஷ்டி நோக்கித்தான் அனைவரும் செயற்பட்டோம். அதன் பின்னர் இன்று



வரை நடக்கும் சம்பவங்களை சம்பந்தன் மறந்துவிட்டாரா?

கடந்த 2015ம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தல் மூலம் நல்லிணக்கத்திற்கான ஒரு நல்லாட்சியை மக்கள் உருவாக்கி, ஒரு தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டது. இதற்கும் தாங்கள்தான் காரணம் என சம்பந்தன் கூறி இருந்தார்.

அந்த நல்லாட்சி முழுவதும் இரா. சம்பந்தன் எதிர்க்கட்சி தலைவராக நியமனம் செய்யப்பட்டார். ஒரு நாட்டை ஆளும் அரசு வருடா வருடம் சமர்ப்பிக்கப்படும் வரவு செலவு திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்த உலகின் ஒரேயொரு எதிர்க்கட்சித் தலைவர் என்ற பெருமையையும் பெற்றுக் கொடுத்தவர்.

அன்றைய அரசின் ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோருக்கு மிகவும் நெருக்கமான சகாவாக இருந்து எதிர்கட்சி தலைவர் என்ற கதிரையை அலங்கரித்தவர். அப்போது இந்த சமஷ்டியைப்பற்றி பேசாது அந்த தீர்வை பெற்றுத்தர எந்த முயற்சியும் எடுக்காமல் தனது எதிர்க்கட்சித் தலைவர் என்ற பதவி பறிபோய்விடும் என்ற பயத்தில் வாய்மூடி மௌனமாக இருந்துவிட்டு, இன்று சமஷ்டி பற்றி பேசுகின்றார்.

தமிழ் மக்களுக்கு சம்பந்தனின் கபட நாடகம் எப்போதும் புரிவதில்லை. அதனால்தான் அவரும் அதனை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றார்.

தமிழ் மக்களுக்கு அவர் ஏதாவது நன்மை செய்ய விரும்பினால், நல்லெண்ணத்துடன் தமிழ் மக்கள் அனைவரையும் ஒன்று திரட்டி உருவாக்கும் அணியினருக்கு ஆதரவு தெரிவித்து, இந்திய முறையிலான ஒரு அரசியல் தீர்வை பெற்றுத்தர முயற்சிகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்” என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தலைவாசல் தினம் ஒரு ஆரோக்கிய தகவல்



### வாய்ச் சுகாதாரம் பேணுதல்

வாய்ச்சுகாதாரம் பேணுதல் அனைத்து வயதினரைப் பொறுத்தவரையிலும் முக்கியமானது. வாய்ச்சுகாதாரம் சரியாக பேணாது விடின் பல நோய் நிலைமைகள் ஏற்படுவதுடன் வாய் துர்நாற்றமும் ஏற்படும். தினசரி காலையிலும் இரவு படுக்கைக்குச் செல்ல முன்னும் பல்துலக்க வேண்டும். பொருத்தமான பற்தூரிகையை தெரிவு செய்ய வேண்டும். Soft அல்லது Mediam என குறிக்கப்பட்ட பற்தூரிகையை பயன்படுத்தவேண்டும். புளோரைட் உள்ளடங்கிய பற்பசையினை பயன்படுத்த வேண்டும். குழந்தை பருவத்தில் முதற் பல் தோன்றியது முதலே பல்துலக்குவதனை தொடங்க வேண்டும். இனிப்பு பதார்த்தம் உள்ளெடுத்த பின் வாயை உடனடியாக கொப்பளிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இதன் மூலம் பற்சூத்தை ஏற்படுவதனைத் தடுக்கலாம். வருடாந்தம் பல் மருத்துவரிடம் சென்று உரிய பரிசோதனை செய்து கொள்வது சிறந்தது.

**வைத்தியகலாநிதி**
**கோ.றஜீவ்**

## சிறைச்சாலைகளில் இதுவரை 3,709 பேருக்கு கொரோனா தொற்று!



சிறைச்சாலையில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மட்டும் மேலும் 54 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி நாடு முழுவதும் உள்ள சிறைச்சாலைகளில் இதுவரை 3,709 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தொற்று உறுதியானவர்களில் 3,229 பேர் குணமடைந்துள்ளதாகவும் அவர்களில் 112 பேர் சிறைச்சாலை அதிகாரிகள் என்றும் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுவரை வெலிக்கடை சிறைச்சாலையில் 832 பேருக்கும் மஹசீன் சிறைச்சாலையில் 829 பேருக்கும் மஹர சிறையில் 785 பேருக்கும் கொழும்பு ரிமாண்ட் சிறையில் 410 பேருக்கும் நீர்கொழும்பு சிறையில் 271 பேருக்கும் கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

அத்தோடு சிறைச்சாலையில் இதுவரை கொரோனா தொற்று உறுதியாகிய 5 பேர் உயிரிழந்துள்ளதாகவும் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## வெள்ளி முதல் நீண்ட தூர பேருந்து சேவைகள் ஆரம்பம்

எதிர்வரும்ஜனவரி முதல்நீண்ட தூர பேருந்து சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் நீண்ட தூர மற்றும் மாகாண பேருந்து சேவை உட்பட இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான அனைத்து பேருந்துகளையும் வழமை போன்று மீண்டும் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

## பொலிஸ் அதிகாரிகளுடன் ஏற்பட்ட மோதலில் கைதியொருவர் உயிரிழப்பு

வெயாங்கொடயில் இன்று (திங்கட்கிழமை) காலை பொலிஸ் அதிகாரிகளுடன் ஏற்பட்ட மோதலில் பல குற்றங்களுடன் தொடர்புடைய 37 வயதான நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் கொலை சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டின் கீழ் கடந்த 19ஆம் திகதி கைதுசெய்யப்பட்டிருந்த நிலையில், பொலிஸ் அதிகாரிகள் இன்று காலை வெயாங்கொடயில் உள்ள ஒரு இடத்திற்கு அவரை அழைத்துச் சென்றுள்ளனர்.

இதன் பின்னர் ஏற்பட்ட மோதலில் காயமடைந்த சந்தேகநபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதேநேரம், இந்த சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கம்பஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். உயிரிழந்த சந்தேக நபர் மீது மூன்று வழக்குகள் மேல் நீதிமன்றில் விசாரிக்கப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## கொழும்பில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த சில பகுதிகள் விடுவிப்பு

கொழும்பு மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த சில பகுதிகளில் இன்று (திங்கட்கிழமை) முதல் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய டேம்வீதி, வாழைத் தோட்டம் மற்றும் மருதானை பொலிஸ் அதிகாரப் பிரிவுகள் இன்று காலை 5 மணிமுதல் தனிமைப் படுத்தலில் இருந்து விடுவிக்கப் பட்டுள்ளன என அரசாங்கத் தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கொம்பனி வீதி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேகந்த மற்றும் ஹுனுப்பிட்டிய கிராம சேகவர் பிரிவுகளும் இன்று முதல் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.


மேலும் வெள்ளவத்தை பொலிஸ் அதிகாரப் பிரிவுக்கு உட்பட்ட மயூரா பிரதேசம், பொரளை பொலிஸ் அதிகாரப் பிரிவுக்கு உட்பட்ட ஹல்கஹவத்த, காளிபுள்ளவத்தை மற்றும் வெல்லப்பிட்டிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட லக்சந்த செவன என்பனவும் இன்று காலை 5 மணிமுதல் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும் வாழைத்தோட்டம் பொலிஸ் அதிகார பிரிவுக்கு உட்பட்ட புதுக்கடை மேற்கு மற்றும் புதுக்கடை கிழக்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுகள் இன்று அதிகாலை 5 மணிமுதல் தனிமைப்படுத்தப் பட்டுள்ளதாகவும் அரசாங்கத் தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எஹெலியகொட பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட சில பகுதிகளும் கொடக்கவல பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட சில பகுதிகளும் நேற்று முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய எஹெலியகொட பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மின்னன, விலேகொட, யகுடாகொட, அஸ்கஹகுல வடக்கு, போபெத்த ஆகிய கிராம சேவகர் பிரிவுகளும் உடன் அமுலாகும் வகையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் கொடக்கவல பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட இறக்குவானை நகரம், இறக்குவானை வடக்கு, இறக்குவானை தெற்கு, மஸ்சிம்புல மற்றும் கொட்டல ஆகிய கிராம சேவகர் பிரிவுகள் உடன் அமுலாகும் வகையில் தனிமைப் படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.



# சிவனொளிபாதமலை பருவகாலம் ஆரம்பம்

சிவனொளிபாதமலை பருவ கால யாத்திரை பூரணை தினமான நாளை (29) ஆரம்பமாகவுள்ளது. சிவனொளிபாத மலைக்கான புனித சின்னங்களை எடுத்துச்செல்லும் நிகழ்வு இன்று இடம்பெற்றது.

இரத்தினபுரி பெல்மதுளை கல்பொத்த ரஜமகா விகாரையிலிருந்து புனித விக்கிரகங்கள் நல்லதண்ணி பாதை வழியாக இன்று நள்ளிரவு மலையுச்சிக்கு எடுத்து செல்லப்படவுள்ளதாக பெங்கமுவே தம்மதின்ன தேரர் தெரிவித்தார்.

இதேவேளை சிவனொளி பாதமலையை தரிசிக்கச் செல்லும் அனைத்து மார்க்கங்களும் பொதுசுகாதார பரிசோதகர்களால் 24 மணிநேர கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட உள்ளது.

மேலும், சிவனொளிபாத மலை பருவகால யாத்திரையில் ஒரே தடவையில் 200 பக்தர்களுக்கு மாத்திரமே அனுமதியளிக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாத்திரையில் பங்கேற்கும் அடியார்கள் தங்களது பிரதேச செயலகங்களில் பதிவு செய்வதுடன் தனிமைப்படுத்தப்படுத்தலுக்கு உட்படுத்தப்படவில்லை என்பதையும் பொதுசுகாதார பரிசோதகர்களால் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி பத்திரமொன்றை தம்வசம் வைத்திருக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

எனினும், சிவனொளிபாத மலை பருவகால யாத்திரையில் பங்கேற்பதை தவிர்த்துக்கொள்ளுமாறு நுவரெலியா மாவட்ட செயலகம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரசியல்வாதிகளே தமிழ் அரசியல் கைதிகளை சிறைமீட்க ஒன்றுபட்டு வாருங்கள்

## அரசியல் கைதிகளின் உறவுகளின் தொடர் சந்திப்பு!



நீதியற்ற முறையில் சிறை வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை சிறை மீட்கும் விடயத்தில் ஒன்றுபடுமாறு அரசியல் கட்சி தலைவர்களையும் ஆன்மீகத் தரப்பினரையும் தமிழ் அரசியல் கைதிகளின் உறவுகள் நேரில் சந்தித்து வலியுறுத்தி வருகின்றனர்.

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வரும் குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் கடந்த தினங்களாக அரசியல் கட்சி தலைவர்களையும் ஆன்மீகத் தரப்பினரையும் சந்தித்து வருகின்றனர்.

நேற்றைய (டிச-27) நாளிலும் அரசியல் கட்சி தரப்பினரை நேரில் சந்தித்து குறித்த விடயம் தொடர்பில் அரசியல் கைதிகளின் உறவுகளினால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்தன், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் மற்றும் ரெலோ தரப்பில் முன்னாள் மாகாண சபை உறுப்பினரும், ரெலோ அமைப்பின் இளைஞர் அணித் தலைவருமான சபா. குகதாஸ் ஆகியோரை நேரில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

தற்போதைய கொரோனா அச்சுறுத்தல் நிலையில் சிறைச்சாலைகளிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் பாதுகாப்பை உடனடியாக உறுதிப்படுத்தக் கோரியும், அவர்களின் விடுதலையை வலியுறுத்தியும் குரலற்றவர்களின் குரல் அமைப்பினால் கடந்த நாட்களில் தொடர்ச்சியாக தமிழ் அரசியல் தரப்புகளையும், ஆன்மீகத் தரப்பினரையும் நேரில் சந்தித்து வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முஸ்லிம் ஜனாசாக்கள் எரிக்கப்படுவதைக் கண்டித்து யாழில் போராட்டம்






முஸ்லிம் ஜனாசாக்கல் எரிக்கப்படுவது கண்டித்து யாழில் போராட்டம் ஒன்று இன்று காலை முன்னெடுக்கப்பட்டது.

முஸ்லிம் சமூகத்தின் ஏற்பாட்டில் யாழ் மத்திய பேருந்து நிலையத்தில் இன்று காலை 9 மணிக்கு இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்த போராட்டத்தில் முஸ்லிம் அமைப்புகளின் பிரதிநிதிகள் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள் உறுப்பினர்கள் மக்கள் என பெருமளவானோர் கலந்து கொண்டிருந்தனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## சர்வதேச சுயாதீன...

கையளிக்கும் வட கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் ஏற்பாட்டில் நடைபெறும் கையேட்டு நிகழ்வில் தவிர்க்க முடியாத காரணத்தினால் என்னால் பங்கு பெற முடியாமையினை நினைத்து மிகவும் மனம் வருந்துகின்றேன்.

இருப்பினும் இனி வருகின்ற காலங்களில் ஒரு இளைஞன் என்ற வகையில் பல வருடங்கள் கடந்தாலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதியினைப் பெற்றுக்கொடுக்கும் வரையில் நான் தளர்வடைய மாட்டேன் என்பதை உறுதியாக கூறுகின்றேன். இப்போராட்டத்தினை நீதி கிடைக்கும் வரையில் எக்காலகட்டத்திலும் கைவிடாது முன்கொண்டு செல்வேன் என உறுதியாக கூறுகின்றேன்.

பௌத்த சிங்கள பேரினவாத அரசாங்கம் நாட்டில் தலைதூக்கியுள்ள நிலையில், எமது நாட்டில் எமக்குரிய நீதி கிடைப்பதென்பது சந்தேகமே. ஆகையினால் எமது போராட்டங்களை சர்வதேச பார்வைக்கு கொண்டுவருவது எமது தலையாய கடமையாகும். எமது பிரச்சினைகள் ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டுக்கு கொண்டுவரப்பட வேண்டும்.

தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலை மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதியை பெற்றுக்கொள்ள தமிழர்களாகிய நாம் அனைவரும் முன்னிற்க வேண்டும். சர்வதேச சுயாதீன விசாரணை மேற்கொள்ளப்படும் போதே எமக்கு நீதிகிடைப்பது சாத்தியமாகும்.

தமிழர்களுக்கான நீதியினை பெற்றுக்கொடுக்க இளைஞன் என்ற வகையில் நான் நிச்சயம் முன்நிற்பேன். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் எங்கு எவ்வாறு இருக்கின்றார்கள் என்பது இன்றும் புரியாத புதிராகவே உள்ளது. இதற்கு தற்போதைய அரசு பதிலளிக்க வேண்டும்.

காலங்கள் பல சென்றாலும் மக்களுக்கான எனது பணிகள் தடைகள் பலவற்றையும் தாண்டி மேற்கொள்ளப்படும். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான எனது குரல் என்றும் ஒலிக்கும் என்பதை மீண்டுமொருமுறை உங்களிடத்தில் கூறிக் கொள்வதுடன், இந்த நிகழ்வில் கலந்து கொள்ள முடியாமையினை எண்ணி மிகவும் மனம் வருந்துகின்றேன்." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எமது உறவுகளை...

"சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் பலருக்குக் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது. இந்தநிலையில், அவர்களின் உறவுகளின் வேண்டுகோளுக்கிணங்க சிறைகளிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் பாதுகாப்பை உடனடியாக உறுதிப்படுத்தக் கோரியும், அவர்களின் விடுதலையை வலியுறுத்தியும் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளோம். எமது உறவுகளின் விடுதலைக்காக இன, மத, கட்சி பேதமின்றி அனைவரும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்" என்றுதெரிவித்து குரலற்றவர்களின் குரல் அமைப்பு அழைப்புவிடுத்திருந்தது.

இந்நிலையில் இன்று காலை நடைபெற்ற நடைபெற்ற போராட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள், அரசியல் கைதிகளின் உறவுகள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் எனப் பலரும் கலந்துகொண்டுள்ளனர்.

## சாரதி அனுமதிப்பத்திரம்...

வந்துள்ளன.

புதிய அரசு ஆட்சிக்கு வந்ததன் பின் அவ்வொப்பந்தத்தை இரத்து செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டதோடு அதனை இலங்கை இராணுவத்திடம் ஒப்படைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனால் வெளிநாட்டு நிறுவனமொன்றுக்கு இதுவரை சென்றுகொண்டிருந்த பெருமளவான பணம் மீதப்படுத்தப்படுமென தெரிவிக்கப்படுகின்றது.

மாதம் ஒன்றுக்கு 60,000 - 90,000 வரை விநியோகிக்கப்படுவதாக போக்குவரத்து ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

# கொரோனா மரணங்கள் குறித்து பொய் பிரசாரங்கள் மேற்கொள்ள வேண்டாம்

கொரோனா மரணங்கள் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் பொய் பிரசாரங்கள் மேற்கொள்வதை தவிர்க்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ள சுகாதார அமைச்சு இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளது.

கொரோனா தொற்றினால் உயிரிழப்போரின் இறுதிக் கிரியைகள் மேற்கொள்ளப்படும் விதம் தொடர்பாக அரசியல்வாதிகள் மற்றும் சில இணையத்தளங்கள் போலி பிரசாரங்களை மேற்கொள்வதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சுக்கு கிடைத்துள்ள அறிக்கைகளின் பிரகாரம், கொரோனா தொற்றினால் உயிரிழக்கும் அனைவரின் சடலங்களும் தகனம் செய்யப்படுவதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் அரசியல் இலாபத்திற்காக சுகாதார அமைச்சின் கொள்கைகளை திரிபுபடுத்தி போலி செய்திகளை சமூக வலைத்தளங்களில் பகிர்வதை தவிர்க்குமாறு சுகாதார அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.



# கிளிநொச்சியில் கனமழை: தாழ்நில பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின

கிளிநொச்சியில் தொடர்ச்சியாக கனமழை பெய்து வருகின்றமையினால் தாழ்நில பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதேவேளை சில குளங்கள் வான்பாய்ந்து வருகிறது. அதாவது, கனகாம்பிகைகுளம் 7 அங்குலம் வான்பாய்ந்து வருவதுடன் பிரமந்தனாறு குளம் 3 அங்குலம் வான் பாய்கின்றது.

இவ்வாறு பிரமந்தனாறு குளம் வான் பாய ஆரம்பித்துள்ளதால், பிரமந்தனாறு-மயில்வாகனபுரம் பிரதேசத்தில் இருக்கும் மக்கள் அவதானமாக இருக்குமாறு இடர் முகாமைத்துவ நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேலும் கனகாம்பிகைக்குளத்தின் கீழ்ப்பகுதியில் உள்ள இரத்தினபுரம், ஆனந்தபுரம் கிழக்கு, கனகாம்பிகைக்குளம், பன்னங்கண்டி, பரந்தன் பகுதிகளிலுள்ள மக்களையும் அவதானமாக இருக்குமாறு மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.






# கொரோனாவால் உயிரிழந்த முஸ்லீம்களின் உடல்கள் தகனம்: பிக்குகள் - பொலிஸாருக்கிடையில் பதற்ற நிலை

ஜனாதிபதி செயலகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுவரும் பிக்குகள் மற்றும் பொலிஸாருக்கு இடையே ஏற்பட்ட கடும் வாக்குவாதத்தை அடுத்து அந்த இடத்தில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

கொரோனா தொற்று உறுதியாகி உயிரிழந்தவர்களின் முஸ்லீம்களின் உடல்களை தகனம் செய்வதற்கு எதிராக பௌத்த பிக்குகள் இன்று (திங்கட்கிழமை) ஜனாதிபதி செயலகம் அருகே போராட்டம் ஒன்றினை மேற்கொண்டனர்.

இந்நிலையில் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி குறித்த இடத்திற்கு வருகை தந்தமையை அடுத்து, பிக்குகள் கொரோனாவினால் பாதிக்கப்பட்டவர்களை தகனம் செய்யும் முறைக்கு தடைவிதிக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தி மனுவை ஒன்றினை கையளித்தனர்.

இலங்கையில் வர்த்தமானி செய்யப்பட்ட சுகாதார வழிகாட்டுதல்களின்படி, கொரோனா தொற்றினால் இறப்பவர்களின் உடல்கள் இறந்த 24 மணி நேரத்திற்குள் தகனம் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது.

இருப்பினும் மத நம்பிக்கைகளுக்கு எதிரான அரசாங்கத்தின் குறித்த நடவடிக்கைகளுக்கு முஸ்லிம்களும் சர்வதேச சமூகம் மற்றும் எதிர்க்கட்சி அரசியல் தலைவர்கள் என பலர் கவலை தெரிவித்திருந்தனர்.

இருப்பினும், இந்த விடயம் தொடர்பாக அண்மையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து அடக்கம் செய்வதற்கான செயல்முறைகள் குறித்து ஆய்வு செய்ய ஒரு நிபுணர் குழு நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 532 கிலோ மஞ்சள் கட்டிகள் தீயிட்டு அழிப்பு

இந்தியாவில் இருந்து மன்னார் பகுதிக்கு சட்டவிரோதமாக கடத்தி வரப்பட்டு, மன்னார் பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட சுமார் 532 கிலோ மஞ்சள் கட்டிகள் இன்று (திங்கட்கிழமை) தீயிட்டு அழிக்கப்பட்டுள்ளது.

மன்னார் உதவி பொலிஸ் அத்தியட்சகர் கஸ்தூரி ஆராய்ச்சி முன்னிலையில், மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சி.பி.ஜெயதிலக தலைமையில், பொலிஸ் தடவியல் நிபுணத்துவ பொலிஸார் இணைந்து மன்னார் நகர சபைக்கு சொந்தமான மலக்கழிவகற்றல் நிலையத்தில் வைத்து தீயிட்டு அழிக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் அமைச்சின் செயலாளரினால் அனுப்பி வைக்கப்பட்ட சுற்று நிருபத்தின் அடிப்படையில் கொரோனா தொற்று அபாயம் உடைய கடத்தல் பொருட்களை உடனடியாக தீக்கிரையாக்கும் படியான அறிவுறுத்தலின் அடிப்படையில் மேற்படி மஞ்சள் கட்டிகள் முதற்கட்டமாக தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

மன்னார், பேசாலை, தாழ்வுபாடு, தலைமன்னார் கடல் பகுதிகள் ஊடாக இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்ட மஞ்சள் கட்டிகளே மேற்படி அழிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 1.2 மில்லியனுக்கும் மேற்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனைகள் முன்னெடுப்பு

கொரோனா தொற்று நோயாளிகளை அடையாளம் காண இலங்கையில் இதுவரை 1.2 மில்லியனுக்கும் மேற்பட்ட பி.சி.ஆர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நேற்று மட்டும் 12 ஆயிரத்து 222 பி.சி.ஆர் சோதனைகள் நடத்தப்பட்டதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

அதன்படி கடந்த பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதியில் இருந்து இதுவரை நாட்டில் 12 இலட்சத்து 4 ஆயிரத்து 350 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவற்றில் டிசம்பர் மாதம் 11 ஆம் திகதியே அதிக எண்ணிக்கையிலான அதாவது 17 ஆயிரத்து 425 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பி.சி.ஆர் மற்றும் அன்டிஜென் பரிசோதனைகள் மூலம் நேற்று 674 கொரோனா தொற்று நோயாளிகள் அடையாளம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கமெரூனில் கோர விபத்து: 37 பேர் உயிரிழப்பு, பலர் படுகாயம்!

கமெரூனின் மேற்கு கிராமமான நேமலில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் 37 பேர் உயிரிழந்ததுடன் 18 பேர் படுகாயமடைந்துள்ளதாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

70 ஆசனங்கள் கொண்ட இந்தப் பேருந்து, மேற்கு நகரமான ஃபோம்பனில் இருந்து தலைநகர் யவுண்டேவுக்கு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) சென்று கொண்டிருந்தபோது, பாரவூர்தி ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பேருந்தில் பயணித்தவர்களில் பெரும்பாலோர் புத்தாண்டு கொண்டாட்டங்களுக்காக பயணித்தவர்கள் என குறிப்பிடப்படுகிறது.

# சீனாவில் மர்பநபர் நடத்திய கத்திக்குத்தில் ஏழு பேர் உயிரிழப்பு

சீனாவில் மர்பநபர் நடத்திய கத்திக்குத்து தாக்குதலில் ஏழு பேர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் ஏழு பேர் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சீனாவின் வடக்கு பகுதியில் லியோனிங் மாகாணத்திலுள்ள கையுவான் நகரில் இந்த சம்பவம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் உள்ள பொது குளியலறைக்கு வெளியே கத்தியுடன் வந்த மர்ம நபர் அங்கிருந்தவர்கள் மீது கத்திக்குத்து தாக்குதல் மெற்கொண்டுள்ளார்.

இந்த கத்திக்குத்து தாக்குதலால் அதிர்ச்சியடைந்த மக்கள் அனைவரும் தங்களின் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள அங்கிருந்து வெளியேற முற்பட்டுள்ளனர்.

எனினும் அந்த மர்ம நபர் தொடர்ந்தும் தாக்குதலில் ஈடுபட்டுள்ளார். இதனையடுத்து, இந்த சம்பவம் குறித்து தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், சந்தேகநபரை கைது செய்தனர்.

எனினும் மர்ம நபர் நடத்திய கத்திக்குத்து தாக்குதலில் 7 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

மேலும் 7 பேர் பலத்த காயமடைந்த நிலையில், அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை உயரலாம் என அஞ்சப்படுகிறது.

இதற்கிடையில் கத்திக்குத்து தாக்குதல் நடத்தியவரின் பெயர் யாங் என்பதும் அவர் உள்ளூரை சேர்ந்தவர் என்பதும் பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

அதேசமயம் தாக்குதலுக்கான காரணம் குறித்த தகவல் தற்போதுவரை தெரிவிக்கப்படவில்லை. இதையடுத்து கத்திக்குத்து தாக்குதல் நடத்திய நபரிடம் பொலிஸார் தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது